வாசிக்க: 1 பேதுரு 4:12-19

***“பச்சை மரத்திற்கே இப்படிச் செய்தால்***
***பட்ட மரத்திற்கு என்னதான் செய்யமாட்டார்கள்?” (லூக் 23:31)***

“இயேசு பாடுபட்டுவிட்டதால் நாம் பாடுபடத் தேவையில்லை!” — தற்காலப் பிரசங்க மேடைகளிலிருந்து கத்தப்படும் பிரபல வார்த்தைகள் இவை. ஆசனங்களில் அமர்ந்திருக்கும் வேதம் தெரியாத பாமரர் இதற்கு மறுமொழியாக “அல்லேலூயா” என முழங்குவார்கள். ஐயகோ, சாத்தான் எவ்வளவாய் நம்மை வஞ்சித்துவிட்டான்! தெய்வீக வெளிப்பாடுகளிலிருந்தும் முன்னறிவிப்புகளிலிருந்தும் அவன் எவ்வளவாய் நம்மை வழிவிலகச் செய்துவிட்டான்! தொலைக்காட்சி ஊழியங்கள் பெரும்பாலும் இந்தச் சரக்கைத்தான் விற்கின்றன. இவ்வித உபதேசம் எவ்வளவு தவறானது என்றும் தாங்கள் எவ்வளவு கண் சொருகிப்போனார்கள் என்றும் நேயர்கள் உணரும்போது, காலம் எவ்வளவு வீணாகிவிட்டதெனக் காண்பார்கள். கல்வாரிப் பாதைக்கு மாற்று வழிகளைக் கண்டுபிடிக்க முயலும் இத்தலைமுறையினராகிய எங்கள் மீது, இறைவா, கருணையாயிரும்!

கிறிஸ்தவர்கள் அனைவரும் கிறிஸ்துவோடும் கிறிஸ்துவுக்காகவும் பாடுபட அழைக்கப்பட்டிருக்கிறோம் (2 தீமோ 2:11,12; பிலி 1:29). பாடுபடுவது என்பது கடவுளின் நித்தியமான திட்டத்தில் உள்ளது. சரித்திரத்தின்படி இயேசு மரித்தது 2000 ஆண்டுகட்கு முன்னர்தான். ஆனால் கடவுளின் நாட்காட்டியின்படி, கிறிஸ்து உலகம் படைக்கப்படுவதற்கு முன்னரே ஆட்டுக்குட்டியாக அடிக்கப்பட்டார். நித்தியத்தின் இந்தக் கடந்தகாலச் சம்பவம் நித்தியத்தின் எதிர்காலத்தின் சங்கீதமாகவும் அமையும் (வெளி 13:8). இயேசுவைப் பொறுத்தவரையில், கிறிஸ்தவ வாழ்வு முதலும் முடிவும் பாடுகள்தான். எனவேதான் அவர் சீடத்துவத்தைக் குறித்துப் பேசும்போது “தினசரிச் சிலுவை” என்பதைக் குறிப்பிட்டார் (லூக் 9:23).

“பச்சை மரம் ... பட்ட மரம்” ஒப்புமை மனிதரால் நாம் எவ்விதம் நடத்தப்படுவோம் என்பதை வலியுறுத்துகிறது. யூதர்கள் ஒருமுறை இயேசுவைப் பார்த்து, “உனக்குப் பேய் பிடித்திருக்கிறது” என்றனர் (யோ 8:52அ). “நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல” என்று அவரிடம் சொன்னால் அதற்கு அர்த்தம் என்ன? (வச 41). அவரது தாயாருக்குத் திருமணமாகுமுன்னரே அவர் கருவானார் என்பதை மறைமுகமாய்த் தாக்கினார்களோ? அவரது சொந்தச் சகோதரரும் சகோதரிகளும் ஒருமுறை, “அவர் மதிமயங்கியிருக்கிறார்” என்றனர் (மாற் 3:21). சிந்தையிலோ, சொல்லிலோ, செயலிலோ ஒரு பாவமும் செய்யாத இறைமகனைக் குறித்தே இப்படிப் பேசினார்களென்றால் மக்கள் நாம் புண்படும்படி ஏதோ ஒருசில வார்த்தைகளைச் சொல்லிவிட்டால் அவ்வளவு கலங்குவது ஏனோ? ஞானமே உருவான இயேசு வானவரது வார்த்தைகள், தேவைக்குக் குறைவாகவோ மிஞ்சியோ அவர் ஒரு வார்த்தைகூட பேசாவிட்டாலும், பெரும்பாலும் தவறாகவே புரிந்துகொள்ளப்பட்டன. அப்படியானால் நாம் தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுதல் எனும் சிலுவைக்குத் தப்ப முடியுமோ?

*செய்ததும் சொன்னதும் இல்லென்று மறுப்பார்,*
*செய்யாததும் சொல்லாததும் ஆம் என்று உரைப்பார்,*
*பொய்யிலும் புரட்டிலும் புதைந்தது உலகம்;*
*மெய்யுடையான் இயேசுமீது வை பாரம்!*